# விதை உற்பத்தியாளர்கள் பின்பற்ற வேண்டிய விதைச்சான்று நடைமுறைகள்

1. சான்று செய்யப்பட்ட விதைகளை அரசு அங்கீகாரம் பெற்ற விற்பனை மையங்களிலிருந்து மட்டுமே வாங்கி பயன்படுத்த வேண்டும்.
2. விதைத்த 35 நாட்கள் (அ) பயிர் பூப்பதற்கு 15 நாட்கள் இவற்றில் எது முன்னதோ அதற்குள் பதிவு செய்ய வேண்டும். நெல்லுக்கு மட்டும் பயிர் பூப்பதற்கு 15 நாட்கள் முன்பு வரை பதிவு செய்யலாம்.
3. வயலாய்வின் போது பயிர் விலகுதூரம், கலவன்கள், குறித்தறிவிக்கப்பட்ட நோய் தாக்கிய பயிர்கள், மறுத்து ஒதுக்கும் களைப்பயிர்கள் ஆகியன அனுமதிக்கப்பட்ட அளவுக்குள் இருக்க வேண்டும்.
4. ஊடுபயிர் சாகுபடி சான்று நிலையில் மட்டும் விதைப்பயிருக்கு இடையூறு இல்லாத நிலையில் அனுமதிக்கப்படும்.
5. அங்கீகாரம் பெற்ற சுத்தி நிலையங்களில் மட்டும் விதைகளை சுத்தி செய்ய வேண்டும்.
6. சுத்தி பணிக்கு முன் இயந்திரத்தை முழுமையாக சுத்தம் செய்ய வேண்டும்.
7. வயல்மட்ட விதைகள் சுத்தி நிலையத்திற்கு கொண்டு வரப்பட்ட நாளிலிருந்து 3 மாதங்களுக்குள் சுத்திப்பணி முடிக்கப்பட்டு மாதிரி எடுக்கப்பட வேண்டும்.
8. விதைப்பைகளை அட்டகங்கள் இட்டு தரையில் படாதவாறு வைப்பதுடன் விதைப்பைகள் சுவற்றில் படாமல் வைக்க வேண்டும்.
9. விதைக்குவியல்களை அட்டகங்களில் அடுக்கும் போது 250 கிலோவுக்கு மிகாமல் (50 கிலோ * 5) வைக்கப்படவேண்டும்.
10. விதைப்பகுப்பாய்வில் தேறிய விதைக்குவியலுக்கு பகுப்பாய்வு நாளில் இருந்து இரண்டு மாதத்திற்குள்ளும் மற்றும் இனத்தூய்மை பரிசோதனை நாளில் இருந்து ஒரு மாதத்திற்குள்ளும் சான்றட்டை பொருத்தப்பட வேண்டும்.